


உ
சிவமயம்





# முத்துமாரி அம்மன் தரிசனம்

## மஹாகும்பாபிஷேகம் - 2008







வெளியீடு :

**ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

**வாரிவனம் சாவகச்சேரி**

**14.07.2008 அன்று திங்கட்கிழமை**

தொகுப்பு: சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சக்தி ஓம்

# அருளாசிச் செய்தி

## ஆதினக்குருக்கள்

### சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் மஹாகுப்பாபிஷேகம்

சைவசமயிகள் ஆகிய நாம் சைவசமயக் குரவர்கள, சந்தான குரவர்கள் போற்றிப்புகழ்ந்து பாடிய இறைவனின் திருவடிகளை சரணடைகிறோம். இவர்களில் திருநாவுக்கரசுநாயனார் ,திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் மாணிக்கவாசகர் ஆகியோரின் அற்புதங்களை கற்று உணர்கிறோம். திருமறைக்காட்டிலே பன்னேடுங்காலமாக வேதங்களினால் பூட்டப்பட்டு இருந்த திருக்கதவை திருநாவுக்கரசு நாயனார் "பண்ணின் நேர்மொழி யாள் உமை பங்கரோ" எனத்தொடங்கி பத்துப்பாடல்கள் பாடி திருக்கதவை திறக்கவைத்து அற்புதம் நிகழ்த்தினார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி திருக்கதவை அடைக்கச்செய்தார். இம் மகிமை சைவசமயத்தவர்களுக்கு மேலும் மேலும் வேதங்களையும் தமிழ்மறையாகிய தேவரம் திருவாசகம் சிவஆகமங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் மீதும் உயர் நம்பிக்கையும் அதியுயர் ஈடுபாடும் கொள்ளச்செய்தது. இந்தவகையில் கும்பாபிஷேகதினத்தில் திருக்கதவு திறக்கவைக்க திருமறைக்காட்டு திருப்பதிகம் பாடி திறப்பது சைவபாரம்பரியமாக வருகிறது இந்த வகையில் இங்கு வெளியீடு செய்யப்படுகிற "முத்துமாரி தரிசனம்" எல்லோரும் பாடி திருக்கதவு திறக்க தமிழோடு தமிழாக நாவரசர் உணர்வோடு உள்ளொளி பெருக பிராத்திப்போமாக. இவ் அரிய பணியை திருப்பணியாளர் திரு வைத்திலிங்கம் சிவராசா அவர்கள் வெளியீடு செய்து வைப்பது அவரின் இறைபணியையும் சிவப்பணியாகிய திருப்பணியை மேன்மேலும் வளரவும், சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் அவர்களின் சமய அறிவுப்பணிகள் வளரவும் அம்பாள் அருளாசிபுரிய பிரார்த்திப்பதுடன் குருபாதம் பணிந்து அமைகிறேன்

அன்பே சிவம்

எல்லோரும் இன்புற்று வாழ்க

ஓம் சக்தி ஓம்

சிவஸ்ரீ சி.த வீரபத்திரக்குருக்கள்
ஆதினக்குருக்கள்
ஸ்ரீ முதமுமாரி அம்மன் தேவஸ்தானம்
வாரிவனம், சாவகச்சேரி
10.07.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஸ்ரீ முத்துமாரியே வாரி வழங்கம்மா

"ஓம்ஸ்ரீமாதாயை நமோ நமக" என லலிதாசகஸ்ரநாமம் ஆரம்பிக்கிறது. ஆயிரம் கோடி உயிர்களை ஈன்றும் பின்னும் கன்னி என மாறாத பெயர்கொண்டு எல்லா உயிர்களுக்கும் அன்னையாக வீற்றிருக்கும் முத்துமாரித்தாய் முத்துப்போன்ற அழகும் அதனை விட பன்மடங்கு அருள்ஒளியும் வாய்ந்தவள். மாரி என்ற சொல் மழை, குளிர், வளம் எனப் பல பொருள்படும். எனவே தன்னை நாடி வந்து வழிபடும் அடியவர்களுக்கு குளிர்ச்சியையும் நல்ல வளத்தையும் வழங்குபவர் ஸ்ரீ முத்முமாரி அம்பிகையாவாள்.

சக்திக்கே இந்துசமயத்தில் பெண்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. சக்தி கண்ணுக்குத் தெரியாது ஆனால் பலவித வடிவங்களில் வெளிப்பட்டு பல கருமங்களை செயற்படுத்தும். அதேபோல் சதாரண ஊனக் கண்ணுக்கு வெளிப்படாமல் நின்றாலும் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள், யோகிகளின் யாக்கைக்கு ஆகப்பட்டு அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவள். இடையனை மகாகவி காளிதாஸராகவும் சாதாரணசோதிடரை, அபிராமிப்பட்டர் ஆக்கியவரும் அன்னையே, இவ்வாறு எங்கும் பரந்தும் செறிந்தும் மறைந்தும் வியாபித்திருக்கும் அன்னையை சாதாரணமாக எம்போன்ற அடியவர்கள் ஊனக்கண்ணால் கண்டுவழிபாடாற்றி மேலாம் சிவகதிபெறும் நோக்கோடு ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. கும்பாபிஷேகத்தினைக் காண்பதும், எண்ணெய்க்காப்பு செய்தலும் யாகக்கிரியைகளைத் தரிசிப்பதுவும் கண்ணாடியில் புதிய அம்பாளைப் பார்த்து வழிபடுவதும் மேலாம் நல்ல புண்ணியத்தை நம்பால் சேர்த்துக்கொள்ளும்

எல வாரிவனம் ஸ்ரீமுத்துமாரித்தாயின் மகாகும்பாபிஷேகக் கிரியைகளில் நிறைவாக கலந்து கொண்டு வழிபாடாற்றி இம்மைப் பயன்களையும் மேலாம் சிவகதியையும் பெறவேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரித்தாயின் பாதக்கமலங்களைப் போற்றுகின்றேன். இவ்ஆலயத்திருப்பணிகளை செவ்வனே நின்று ஆற்றிக்அகாண்டிருக்கும் திரு வை சிவராசா அவர்களுக்கும் இன்று மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக ஆற்றிக்கொண்டிருப்பவராகிய சிவஸ்ரீ சி.த வீரபத்திர குருக்கள் அவர்களுக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்மன் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

இந்து தர்ம அசிரியர்
சைவப்புலவர்
சைவசித்தாந்தபண்டிதரபுத்தூர்.
செ. கந்தசத்தியதாசன் ஜே.பி
செயலாளர், அகிலஇலங்கைச் சைவப்புலவர் சங்கம்

முருகன் திடல்,
புத்தூர் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

# வாழ்த்துரையும் சமர்ப்பணமும்

ஓம் ஸ்ரீ வாரிவனம் முத்துமாரித் தாயே சரணம் அம்மா

தென்மராட்சியின் சாவகச்சேரி நகரில் வாரிவனம் பதியில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மாவின் மகாகும்பாபிஷேதினத்து வெளியீடு செய்யப்படும்.

''முத்துமாரி அம்மன் தர்சனம்'' எல்லோர் வாழ்வும் ஒளிபிறக்க வழி அமைக்கட்டும். என்ற எண்ணத்தில் வெளியீடு செய்யப்படுகின்றது. திருமறைக்காட்டில் வேதங்களால் அடைப்பட்ட திருக்கதவு - திருநாவுக்கரசு நாயனாரால் திறக்கப்பாடிய வரலாற்று உண்மையையும் அற்புதத்தையும் போற்றி சைவசமய நெறிநின்ற ஆலயகும்பாபிஷேகம் நிகழும் காலம் திருக்கதவு திறக்க திருமறைக்காட்டுத் திருப்பதிகம் பாடுவது எல்லோரும் அறிவார்கள் அந்தவகையில் இன்று வெளியீடு செய்யப்படும் இப்பதிகம் அனைவரும் பின்பற்றி நாள்தோறும் பாரயாணம் செய்து நல்வாழ்வு வாழ வாழ்த்துவதுடன்

''எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டின் ''

''இறையருள் ஒன்றே துணை செய்யும்''

சைவப்புலவர் குமரசாமி சுமுகலிங்கம் அவர்களின் சமயப்பணி வளரவும் .மகாகும்பாபிஷேகப் பெருவிழா(14.07.08) சிறப்பு அமைய அம்பாள் பாதம் பணிந்து விழித்து வாழ்த்தி முத்துமாரி அம்மன் தரிசனம் என்னும் நூலை அம்பாளிற்கு சமர்பணம் செய்கிறேன் .

ஆலயத் திருப்பணியார்

திரு வைத்திலிங்கம். சிவராசா

சிவா ரேடிங் கம்பனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அருளாசிகிடைக்கப் பிராத்திக்கிறேன்

**அன்புள்ள அம்பாள் அடியார்களே!**

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வாரிவனத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு நானும் மகிழ்ச்சி அடைகிறேன் பழமையும் பெருமையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் ஆலயம் தென்மராட்சியை அலங்கரிக்கும் நிலையில் இராஜகோபுரம், பரிவாரமூர்த்திகளாக விநாயகர், முருகன், கேதாரகௌரி சமேத கேதாரீஸ்வரர் ஆகியோர் விற்றிருப்பது சிறப்பாக காணப்படுகிறது. 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்று நம் சமயம் ஆலயங்களில் இராஜகோபுரம் அமைத்து வழிபாடு செய்வதனூடாக இறைவனுடைய அருளைப் பெற்று இப்பிறவியிலும் மறுபிறப்பிலும் புண்ணியப் பேற்றுக்கு ஆளாகின்றோம். சக்தி வழிபாடு, சிவம் இன்றேல் சக்தி இல்லை சக்தி இன்றேல் சிவம் இல்லை என்பதை நிருபிப்பதாக இப்பிரதேசம் அருட்காட்சியளிக்கிறது.

"நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு"
"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

என சைவசமயம் போற்றி நிற்கின்றது இதனை. உணர்த்தும் வகையாக கும்பாபிஷேகதினத்திலே "முத்துமாரி அம்மன் தரிசனம் "என்னும் நூல் அம்பாளுக்கு சமர்ப்பணம் செய்வதற்கு அருளாசிச் செய்தி வழங்கிய ஆதீனகுருமுதல்வர் சிவஸ்ரீ சி.த வீரபத்திரக்குருக்கள், வாழ்த்துரை வழங்கியவரும் , இன் நூலாக்கத்திற்கு வழிவகுத்தவருமாகிய திருப்பணியாளர் திரு வைத்தியலிங்கம் சிவராசா அவர்களுக்கும். அம்பாள் அடியார்களுக்கும் அனைத்து ஜீவாத்மாக்களுககும் அருளாசிகிடைக்க அம்பாள் பாதம் பணிந்து பிராத்திக்கிறேன்

சைவப்புலவர்
சைவசித்தாந்த பண்டிதர்
இந்து தர்மாசிரியர் அறநெறிக் குரு
திரு . குமாரசாமி சுமுகலிங்கம் ஜே.பி
யா / சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் நடைபெறும் போது

# திருக்கதவு திறக்க பாடப்படும் பதிகம்

# திருமறைக்காடு திருப்பதிகம்

காவிரித் தென்கரைத்திருத்தலங்கள் 127. இவற்றில்125வது தலம் திருமறைக்காடு ஆகும். தேவார முதலிகள் மூவராலும் பாடல் பெற்ற தலம் ஆகும் சப்த விடங்கத்தலங்களுள் ஒன்று வேதம் பூசித்த திருத்தலம் கருவறையின் திருவாயில்கள் வேதங்களால் அடைக்கப் பெற்று இருக்க பக்கத்தில் ஒரு வாயில் அமைத்து மக்கள் ஈசனை (மூலவரை) வணங்கி வந்தனர். இத்தலத்தை திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அடைந்த போது இத்தன்மை அறிந்தனர். திருநாவுக்கரசர் திருவாயிலின் திருக்கதவு (திருக்காப்பு) திறக்கவும் திருஞான சம்பந்தர் மீளப்பொருந்தவும் (அடைக்கவும்) தேவாரம் பாடி அற்புதங்களை நிகழ்த்தினர்

1.சுவாமியின் பெயர்கள் 1) மறைக்காட்டீஸ்வரன்
2) வேதாரண்யநாதர்
3) வேதவனேசர்

2. திருமுறை - 4 வது

3. தலவிருட்சம்- வன்னி

4. தீர்த்தம் - வேததீர்த்தம் (கடல்)

இருவரும் இறைவனை கருவறை நேர்வாசலால் தரிசனம் செய்து அருளின்பம் அடைந்த தன்மை உணர்வீர் நீரோ.

1) திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ
மண்ணி னார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுரை :-

சிவபெருமானே! யாழில் எழும் பண் போன்ற இனிய மொழியினைப் பகரும் உமா தேவியைப் பாகமாகக் கொண்ட ஈசனே! தேவரீர் இம் மண்ணுலகத்தவர் வலம் வந்து தொழுது ஏத்தும் மறைக்காடர் அடியவர்களாகிய நாங்கள் தேவரீரைக் கண்ணாரக் கண்டு தரிசிப்பதற்குத் திருக் கதவைத் திறந்து அருள் செய்வீராக.

2)

ஈண்டு செஞ்சடை ஆகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீங்குமே

தெளிவுரை :-

ஈசனே! தேவரீர் சிவந்த சடைமுடியுடன் திகழ்பவர் கரிய மேகத்திலும் மிகுந்த கருமையுடைய கண்டத்தை உடையவர் அடியேனை ஆட்கொண்ட தேவரீர் அருள் செய்வீராக. நீண்டு விளங்குகின்ற இத் திருக்கதவினை அடைத்துத் தடுத்திருக்கின்ற வலிமையான தாளை நீக்குவீராக.

ஆகம் - உடம்பு

3) அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரம் சுட்ட சுவண்டரோ
பட்டம் கட்டிய சென்னிப் பரமரோ,
சட்ட இக்கத வம்திறப் பிம்மினே

தெளிவுரை :-

ஈசனே! தேவரீர் அட்டமூர்த்தியாய் விளங்கும் பெரியவர் தீயவர்களாகிய அசுரர்களின் மூன்று புரங்களை எரித்தவர் சென்னியில் திருப்பட்டத்தைக் கட்டி விளங்கும். பரமர் இக்கதவை விரைவில் திறக்குமாறு செய்வீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரம் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரிவிக்கவே

தெளிவுரை :-

ஈசனே! தேவரீர் நான்கு மறைகளை விரித்து ஓதியவர் முப்பரங்களை எரித்தவர் கோவண ஆடையை அணிந்திருப்பவர் பெருமைக்குரிய இக் கதவைத் திறக்க வைப்பீராக.

5) மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைமகள் வந்திறைஞ் சும்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வம்துணை நீக்குமே

தெளிவுரை :-

ஈசனே! தேவரீர் மலைப்பினைத் தருமாறு அழியாதவாறு ஊழிதோறும் நிலைத்திருக்கும் மறைக் காட்டில் மேவும் பெருமானே! வேதங்களாகிய கலைகளால் ஏத்தப்பெறும் ஈசனே! விலை மதிக்க முடியாத பெருமையுடைய மாணிக்க வண்ணம் உடைய பரமனே! அண்மையில் தாளிட்டு இருக்கும் இத் திருக்கதவினைத் திறக்கச் செய்வீராக.

6)

பூக்கும் தாழை புறிணி யருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்கும் காண்பரி யீரடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுரை :-

நீர்க்கரையின் புறங்களில் தாழை பூக்கும் பொழில் சூழ மேவும் மறைக்காட்டில் மேவும் ஈசனே! யாராலும் காண்பதற்கு அரியராக விளங்கும் அடிகளே! தேவரீரை யாம் தொழுவதற்குக் கதவை திறவீராக.

உமை – உம்மை ஈசனைக் குறித்தது.

7)

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந்து இறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே.

தெளிவுரை :-

திருநீறு பூசி விளங்கும் விகிர்தனே! ஏக்காலத்திலும் அழியாத அழகுடைய மறைக்காட்டீசரே! அடியவர்கள் வந்து இறைஞ்சுகின்றோம். பெருமைக்குரிய இக்கதவத்தின் பிணியை நீக்குவீராக.

சிறப்புரை :-

தாள் கொண்டு பிணித்து அடைக்கப்பெற்ற கதவானது திறக்கப்படாத நிலைமை பிணி நீக்குமே என உரைக்கப் பெற்றது. இத்தகைய நேர்வாயில் வழிச்சென்று ஈசனை வணங்காமையால் அடியவர்களின் மனத்தில் ஏக்கம் என்னும் பிணி சேர்தலால் அப்பிணியினை அடியவர்கள் சொல்லலாகாது என்னும் குறிப்பில் பிணி நீக்குமே என்னும் வேண்டுகோள் விடுத்தலும் ஆம்.

8) ஆறு சூடும் அணி மறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மான்இந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுரை :- ஈசனே! கங்கையைத் தரித்த மறைக்காட்டு ஈசனே! உமாதேவிக்கு ஒரு பாகத்தை வழங்கி அருளிய பரமனே! இடப வாகனத்தில் ஏறிய எம்பெருமானே! மாற்றமில்லாத இக் கதவின் வலிமையான தாளை நீக்குவீராக.

9) கண்ண வெண்பொடிப் பூசும் சுவண்டரோ
பண்ணி யேறுகந்து ஏறும் பரமரோ
அண்ண லாதி அணி மறைக் காடரோ
திண்ண மாக்கத வம்திறப் பிம்மினே.

தெளிவுரை :-

ஈசனே! திருவெண்ணீறு பூசும் பரமனே! நன்கு அலங்காரம் செய்யப்பட்ட இடபத்தை விழைந்து ஏறிய பரம பொருளே! அண்ணலே! ஆதி காலத்திலிருந்து ஊழிகளால் அழியாதவாறு நிலைத்து மேவும் மறைக்காட்டு நாதரே உறுதியாக விளங்ம் இக்கதவைத் திறக்கச் செய்வீராக.

பண்ணி – அலங்கரித்தல்

10) விண்ணு ளார்விரும் பிஎதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

தெளிவுரை :-

தேவர்கள் எல்லாரும் விரும்பி எதிர் கொள்ளவும் மண்ணுலகத்தில் உள்ள அடியவர்கள் எல்லாரும் வணங்கவும் திகழும் மறைக்காட்டு நாதனே! தேவரீரைக் கண்ணால் காண வேண்டும். திண்ணமாக இக் கதவினைத் திறந்து அருள் செய்வீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) அரக்கனைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சுரக்க இக்கத வம்திறப் பிம்மினே

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை :-

புன்னை மரங்கள் பெருகிச் சூழ்ந்து மலர்களைச் சொரியும் மறைக்காட்டில் விளங்கும் பெருமானே கயிலை மலையை எடுத்த இராவணனைத் திருப்பாதவிரலால் அடர்த்து நெரித்த ஈசனே எம்பெருமானே தேவரீர்

இரக்கம் அற்றவரானீர் இக் கதவுகளை விரைவில் திறக்குமாறு செய்வீராக.

குறிப்பு :-

இத்திருக்கடைக் காப்பினை அடுத்துத் திறக்கதவமானது இறைவன் அருளால் திறக்கப்பெற்று இருபெரும் குரவர்களாகிய திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் ஈசனைத் தரிசனம் செய்து மகிழ்ந்தனர் பின்னர் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடிக் கதவினை மூடச் செய்தார். என்பதும் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்சை

தீட்சை என்ற சொல்லின் பொருள் அருள் நோக்கம், அதாவது அருளைக் கொடுக்க மருளை நீக்குதல் பரம்பொருளாக உள்ள சிவபெருமான் ஆசாரியனை அதிட்டித்து நின்று தீட்சைபெறுபவனிடத்து உலகஎண்ணங்களை (வியாகபத்தை) விலக்கி பிறவிக்கு ஏதுவாகிய மலத்தைக்கழித்து சர்வவியாபகமாகிய சிவம் பிராகசித்தலுக்கு ஏதுவாகிய ஞானத்தைக் கொடுத்து பிறவியை போக்குகிறான் என்பது கருத்து சைவர்கள் என்று சொல்லப்டும் தகுதிக்கு முதலாவது படி ஆரம்ப சமய தீட்சையாகும்.

இது சைவர்கள் எல்லோரும் பெறத்தக்கது தீட்சை, பெற்றவனே சைவசமயத்துக்குரிய கிரிகைகள் யாவும் செய்யும் தகுதியுடையவன். சைவர்கள் காலை மாலை இருவேளையும் செய்யும் வழிபாட்டு சடங்கிற்கு அனுட்டானம் என்று குறிப்பிடுவர் தீட்சை பெற்றோர் அனுட்டானம் செய்யதக்கவர் ஆவார்.அல்லது விரதகாலமாவது அனுட்டானம் செய்வது நனறு.

தீட்சைகள் சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாணதீட்சை எனபன குறிப்பிடத்தக்கன.

விசேட தீட்சை என்பது சமயதீட்சையிலும் அதிக சிறப்புடையது இது ஆன்மார்த்தமாக சிவபூசை செய்யும் தகுதியை தருவது.இப்பூசை காலை மாலை தினந்தோறும் நீராடி உணவுஉட்கொள்ளமுன் ஆயுள் உள்ளவரைக்கும் செய்யத்தக்கது.

நிர்வாண தீட்சை மேலும் சிறப்புடையது இது மோட்சம் தரத்தக்கமார்க்கத்தில் தன்னைப்பயிற்ற உதவுவது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராக்கம்

உருத்திராக்கம் என்பது சிவபெருமான் திருக்கண்ணில் தோன்றிய மணி என்று பொருள்படும்.

திரிபுரத்து அசுரர்மூவரால் நிகழ்ந்த துன்பத்தை தேவர்கள் பெருமானிடம் விண்ணப்பித்தபோது ஆருள் சுரந்து அவரது திருக்கண்கள் பொழிந்த நீர்த்துளிகளே அம் மணிகள். இப்போது கிடைக்கின்ற உருத்திராக்கம் இமயமலையில் உள்ள ஒருமரத்தினுடைய வித்து. சிவசாச்சாரியரும், சைவரும் எந்த நேரமும் அக்கமணி அணிவது சிறப்புடையது ஆகும். சிவபூசை, சைவக்கிரிகைகள் செய்யும் பொழுதேனும் அணிந்திருப்பது அவசியம். உருத்திராக்கமானது திருஅருட்பேற்றிற்கு அவசியமாகவும் அடையாளமாகவும் விளங்குவதை அறிவோமாக.

# திருநீறு

திருநீறு வடமொழியில் விபூதி எனப்படும். இச் சொல்லின் பொருள் மேலான ஐஸ்வரியம் என்பது பொருள். இங்கு வழக்கத்தில் உள்ள விபூதி பசுவின் சாணத்தை எடுத்து விதிப்படி சுட்டுப் பெறப்பட்ட சாம்பலாகும் விபூதி தரிக்கவேண்டும் என்பதை உபநிடதங்கள் வலியுறுத்தி கூறியுள்ளன. தமிழ் வேதத்தில் திருஞானசம்பந்தர் பாண்டியனின் சுரத்தை தீர்ப்பதற்கு திருநீற்று பதிகம் பாடியுள்ளார். விபூதியை வடக்கு அல்லது கிழக்கு முகமாக இருந்து உத்துளனமாகவோ திரிபுண்டரமாகவோ தரிப்பது சிற்பபுடையதாகும். திரிபுண்டரம் என்பது சமயதீட்சை பெற்ற ஒருவர் நீர்விட்டுக்குழைத்து விதிப்படி உரியஸ்த்தானங்களில் அணிந்துகொள்வதாகும்.

உத்துளனம் என்பது விபூதியை நிலத்திலே சிந்தாது சிவசிவ என்று சிரத்திலே இட்டு நெற்றியிலே தரித்துக்கொள்வது ஆகும். விபூதி அணிதலானது ஞானஒளியினால் மல நீக்கம் பெற்று சிவத்துவ பேறுபெறுவதற்கு அறிகுறியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# கோமாதாவிலுறையும் தெய்வங்கள்

| | | |
|---|---|---|
| கொம்பின் அடியில் | - | பிரமவிட்டுணுக்கள் |
| கொம்பின் நுனியில் | - | கோதாவரி முதலிய |
| | - | தீர்த்தங்களும் |
| | - | சராசரங்களும் |
| சிரத்தில் | - | சிவன் |
| நடுநெற்றியில் | - | உமாதேவி |
| மேல்நாசியில் | - | முருகக்கடவுள் |
| உள்நாசியில் | - | நாகேசர் |
| இரு காதுகளிலும் | - | அச்சுவினி தேவர் |
| இரு கண்களிலும் | - | சூரிய சந்திரர் |
| பல்லில் | - | வாயு |
| நாவில் | - | வருணன் |
| ஊங்காரத்தில் | - | சரஸ்வதி |
| இருதயத்தில் | - | இயமன் |
| கெண்டைத்தலத்தில் | - | இயக்கர் |
| உதட்டில் | - | உதயஅஸ்தமன சந்திகள் |
| கழுத்தில் | - | இந்திரன் |
| திமிலில் | - | அரக்கர்கள் |
| மார்பில் | - | சாத்தியர் |
| நான்கு கால்களிலும் | - | அனிலவாயுக்கள் |
| முழந்தாள்களில் | - | மருத்துவர் |
| குரத்தின் நுனியில் | - | நாகலோகத்தார் |
| குரத்தின் நடுவில் | - | கந்தருவர் |
| மேற்குரத்தில் | - | தேவமாதர்கள் |
| முதுகில் | - | உருத்திரர் |
| சந்திகளில் | - | வசுக்கள் |
| அரைப்பலகையில் | - | பிதிர்கள் |
| பகத்தில் | - | சத்தமாதர்கள் |
| அபானத்தில் | - | இலக்குமி |
| அடிவாலில் | - | நாகேசர் |
| வால் மயிரில் | - | சூரியன் ஒளி |
| மூத்திரத்தில் | - | கங்கை |
| சாணத்தில் | - | யமுனை |
| உரோமத்தில் | - | முனிவர்கள் |
| உதரத்தில் | - | பூமாதேவி |
| முலையில் | - | சமுத்திரம் |
| வயிறு, இருதயம், முகம் | - | காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும் |
| எலும்பிலும், சுக்கிலத்திலும் | - | யாகங்கள் |
| எல்லா அவயங்களிலும் | - | கற்புடை மகளிர் |

**நன்றி - சிவதருமோத்திரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கோபூசை செய்வோம் கோடி பலன் பெறுவோம்.

பசுவின் உடம்பெங்கும் நாம் வழிபடும் அத்தனை தெய்வங்களும் நமக்கு பயனளிக்கும் தேவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆலயத்தில் இருக்கின்ற விக்கிரகத்தில் மூர்த்தியை (ஆவாகனம்) வரவழைத்து இருத்திப் பூசிப்பர். ஆனால் பசுவில் இத்தெய்வங்கள் எல்லாமே தானாக உறைவர். எனவே நாம் கோபூசை செய்து வழிபட்டு நல்ல பயனைப் பெறுவது சுலபமல்லவா. பசுவின் பின்வரும் உறுப்புகளுக்கு பூசை செய்யும் போது உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள்

| | |
|---|---|
| இரு கொம்புகளின் நடுவே | ஓம் சிவாயநம |
| வலது கொம்பில் | ஓம் பிரம்மணே நம |
| இடது கொம்பில் | ஓம் விஷ்ணுவே நம |
| கொம்பின் நுனியில் | ஓம் சரஷ்சஷ்டி கோடி தீர்த்தேப்யோ நம |
| மூக்கின் நுனியில் | ஓம் த்யேஷ்டாயை நம |
| வலது கண்ணில் | ஓம் சூர்யாயை நம |
| இடது கண்ணில் | ஓம் சந்திராயை நம |
| பற்களில் | ஓம் மாருதாயை நம |
| தாடையில் | ஓம் வருணாயை நம |
| மேலுதட்டில் | ஓம் யக்ஷேப்யோ நம |
| கீழுதட்டில் | ஓம் யமாயநம |
| கழுத்தில் | ஓம் இந்திராய நம |
| குழம்பின் மேற்பாகத்தில் | ஓம் அப்ஸரேப்யோ நம |
| குழம்பின் நுனியில் | ஓம் நாகேப்யோ நம |
| கால்களில் | ஓம் கணேப்யோ நம |
| பத்து நாடிகளில் | ஓம் நேத்ரோப்யோ நம |
| மடியின் அடியில் | ஓம் ஓம் பிருகுப்யோ நம |
| மடியின் நுனியில் | ஓம் கோரேப்யோ நம |
| இருதயத்தில் | ஓம் உமாதேவ்யை நம |
| யோனியில் | ஓம் மகாலக்ஷ்மியை நம |
| உரோமங்களில் | ஓம் தேவேப்யோ நம |
| கோமயத்தில் | ஓம் பிரும்மனே நம |
| கோமூத்திரத்தில் | ஓம் விஷ்ணுவே நம |
| பசுவின் நெய்யில் | ஓம் ருத்திராய நம |
| பசுவின் தயிரில் | ஓம் ஈஸ்வராய நம |
| பசுவின் பாலில் | ஓம் சதாசிவாய நம. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கோமாதாவைப் பேணுவோம்

" பசு பால் தரும்" " பசு சாதுவான மிருகம்" என்பது நாம் பாலர் வகுப்பில் படித்த பாடம்.

● தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவருக்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை பால் தந்து காப்பது - **பசு**

● நம் உயிர் பிரியும் வேளையிற் கூட இறுதியாக (உற்றார், உறவினர்) எம் வாயில் விடப் பால் தருவது - **பசு**

● ஆதலால் தாய்மார்களுக்கு எல்லாம் அரசியாகவும் (கோ- அரசு, மாதா- தாய்) பசுத்தாயாகவும் (கோ- பசு, மாதா- தாய்) கோமாதா எனப் போற்றப்படுவது - **பசு**

● நாம் கழித்துவிடும் புல், தவிடு, கஞ்சி, வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை, முதலானவற்றை உண்டு அதிசயிக்கத் தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது - **பசு**

● தனது கழிவுப் பொருட்களான சாணியையும், முத்திரத்தையும் கூட பயிர் வளர்க்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும் கிருமி நாசினியாகவும் தருவது - **பசு**

● நமது வீட்டையும் சுற்றாடலையும் கூடச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமான சாணியைத் தருவது - **பசு**

● எல்லாத் தேவர்களும், முனிவர்களும், புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் எழுந்தருளி இருத்தற்குரிய தெய்வத்திருவுரு - **பசு**

● எல்லாத் தேவர்களின் அனுக்கிரகத்தையும் பெறுவதற்குரிய வழிபாட்டுப் பொருளாயிருப்பது - **பசு**

● சைவசமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணியாகவாசனத்துக்குரிய பாலைத் தருவது - **பசு**

● இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்சகௌவியமாகிய பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மையுடையது - **பசு**

● சைவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் முன் கருவறையைத் துய்மை செய்து தேவர்களின் ஆசியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவது - **பசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சைவாலய நித்திய பூசையில் கோபூசை செய்து மலரிட்டுத் தூபதீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்து வணங்கப்படுவது - பசு

● சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபில பூசைக்கு உரியது - பசு

● கோதானப் பொருளாவதன் மூலம் பாவம் நீக்கிப் பெரும் சிவ புண்ணியத்தை ஈட்டித் தருவது - பசு

● சிவகதி நல்கும் சிவசின்னமான திருநீற்றின் மூலப் பொருளான சாணியின் உற்பத்தித் தானமாயிருப்பது - பசு


● சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபில பூசைக்கு உரியது - பசு

● புது வீடு அமைக்கும் போது தான சுத்திக்காக அங்கு கட்டப்படுவது - பசு

● திருமணத்தின் போது மாங்கல்ய தாரணம் முடிந்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காகத் தரிசனமாவது - பசு

● மணமக்கள் நாள் முகூர்த்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்திற்கான பாலைத் தருவது - பசு

● அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வீட்டிற்கு வரும்போது வாயிலில் தரிசனமாவது - பசு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டிறைச்சியால் வரும் கேடு

மாட்டிறைச்சியால் பல வியாதிகள் உண்டாகும். பித்தத்தையும் கபத்தையும் அதிகரிக்கும் காம உணர்வை அதிகப்படுத்தும். எளிதில் சீரணமாகாது. தேகத்தில் ஒரு விதமான புலால் நாற்றத்தை உண்டாக்கும். அற்பவாத ரோகத்தைக் கண்டிக்கும்.

கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேருடம்பி
லாமா வியாதிக் களவுண்டோ - காமாதி
போகமுடன் மந்திக்கும் புன்வாதம் சேதமுறும்
தேகமதில் நாற்றமுறுந் தேர்.

*சித்தவைத்திய பதார்த்தகுண விளக்கம் பக்கம் : 268*

## சிவபூமியில் பசுவதை தகுமா!

மக்களுக்கு நல்வழிகாட்ட வேண்டிய உள்ளூராட்சிச் சபைகள் வருமான நோக்கத்திற்காக முன்னைய காலங்களில் மாட்டிறைச்சிக் கடைகள் இல்லாத இடமெங்கும் மீண்டும் மீண்டும் விளம்பரம் கோரி மாட்டிறைச்சிக் கடைகளை அமைப்பித்துச் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் அதனை உண்ணும் பழக்கத்தை ஊக்குவித்தல் முறையா?

பசுக்களைத் தெய்வமாகப் பூசித்து வணங்க வேண்டிய சிவபூமியாக நமது மண்ணில் பசுக்களைக் கொள்வதற்குக் கொல்களங்களையும் அமைத்துக் கொடுக்கிறார்களே! இது முறையா? இது தகுமா?

- தர்மதீபம்

## பசுவின் குரல்

**காருண்யம் மிக்க மனிதர்களே!**

எமது பாலில் நீங்கள் வளர்கிறீர்கள். உங்கள் வயல்களுக்குப் பசளை தரகின்றோம். எருதுகள் வண்டிலை இழுக்கின்றன. இந்த மண்ணில் வளரும் புல்லை உண்டு உங்களுக்கு இவ்வளவு பயன்களையும் தரும் எங்களை நன்றி கெட்டுக் கொலைக் களததுக்கு அனுப்புகின்றீர்களே! இது தகுமா!

## பெரிய புராணம்

உள்ளும் தகைமை இனிப்பிறவேறுளவே! உழைமான் மறிக்கன்று
துள்ளும் கரத்தார் அணிபணியின் சுடர்சூழ்மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம் பிராட்டியுடனே சேரமிசைக்
கொள்ளும் சினமால் விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபிகுலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமாதாவைக் காத்து திருமூலர் ஆனார்.

இமயத்திலிருந்து தென்நாடு நோக்கி வந்த சுந்தரமுனிவர் என்பவர் வரும் வழியில் பசுமேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடப்ப அவனைச் சூழ்ந்து நின்று பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதைக் கண்டார்.

பசுக்களின் துயர் துடைக்காது செல்வது பாவம் எனக் கருதித் தன் யோகசித்தியினால் தனது உடலை ஒரு மரத்தின் மேல் கிடத்திவிட்டு மூலன் உடலிற்புகுந்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார்.

மீண்டும் வந்தபோது தன் உடலைக் காணாமையினால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தில் தவமிருந்து மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப்பெயர் பெற்றுச் சிவகதி அடைந்தார். பசு காத்ததாலே திருமூலர் ஆனார்.

## கோமாதா ஓம்பலால் சண்டேசுரர் ஆனார்.

பசு மேய்ப்பவன் ஒருவன் பசுவைக் கோலால் அடித்ததைக் கண்டு பொறுக்கமாட்டாத விசாரசருமர் எனும் பிராமணச் சிறுவன் அன்று முதல் மேய்ப்பானை விலக்கித் தானே பசுக்களை மேய்த்து வந்தான். மண்ணியாற்றங்கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தாமாகச் சுரந்து பொழிந்த பால் கொண்டு அப்பால் வீணாகாவகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வழிபட்டார்.

இதன் உண்மையை அறியாத மூடர் சொற்கேட்ட தந்தையார் பாலை மண்ணில் சொரிந்து பாழ் செய்கிறானே என அதைக்காலால் இடறத் தன் சிவபூசைக்குக் குந்தகம் செய்தவர் காலைச் சிறுவன் கோலால் அடிக்க அது மழுவாகித் தந்தையின் கால்கள் தறிபட்டன.

சிவபூசையின் உறிதி கண்ட சிவபெருமான் தந்தைக்கும் தனயர்க்கும் அருள்புரிந்து விசாரசருமருக்குச் சிவ வழிபாட்டின் பலன் நல்கும் சண்டேசுரர் பதம் நல்கினார். பசு ஓம்பலின் பயன் சண்டேசுரர் பதம் நல்கியது.


**உசாத்துணை நூல்கள்**

"கோமாதா" கருத்துக் களஞ்சியம்
சைவப்புலவர் சு. செல்லத்துரை

திருமுறை -4

சைவ வினாவிடை : ஆறுமுகநாவலர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேண்டுதல்

இறைவனை ஆலயங்களில் வழிபடுவது, மனிதராக மண்ணிற் பிறந்து தவவாழ்வு வாழ்ந்து மனிதர்களுக்கு நன்னெறிகள் வழங்கி இறை நிலையில் கலந்த குருமார்களை வழிபடுவது, இறைவனது அடியார்களாக திருத்தொண்டு செய்து வரும் சான்றோர்களை வழிபடுவது - என வழிபாடுகள் மூன்று வகைகளாக மரபில் உள்ளன.

சில வழிபாட்டில் நாயன்மார்கள் , சமயக்குரவர் சந்தானக்குரவர் , சித்தர்கள் முதன்மையானவர்கள். அவர்கள் காட்டிய சிவநெறியை சீராக கடைப்பிடித்து அயராது அரனுக்கு தொண்டாற்றி வரும் அடியார்கள் - ஆதீனங்களிலும் மடங்களிலும் ஆஸ்ரமங்களிலும் , குடில்களிலும் வழிபாட்டு மன்றங்களிலும் உள்ளர்.

சிவனடியார்கள் , சைவப்பெரியார்கள் , ஞானியர்கள் சித்தர்கள்வழி நின்று இறைப்பணி ஆற்றி நல்வாழ்வு வாழ வேண்டுகின்றேன்.

நன்றி

தொகுப்பாசிரியர்.

*Cover Design By Senthu Graphics , post office rd,chavakachcheri. 0779236341*
*Paper works pothigai , No 114 ,kandy road, chavakachcheri.*
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org